**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**

**Spl. Case No. 1/2019**

**Prosecution Witness P.W. 28**

.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சிவானந்தம் | Calling | : SI (103) |
| Father's name | : திரு. வேலு | Religion | : Hindu |
| Village | : சுவாத்தான் | Age | : 59 |
| Taluk | : முதுகுளத்தூர் | | |

நாள் **- 24.11.2025**

**(1 ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது, 2 ம் எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009 ஜூன் மாதம் முதல் பரமக்குடி தாலுகா காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது, பாரதி நகர், கதவு எண்.12/3/845 என்ற வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தேன். அப்போது அந்த வீடு திருமதி.தமிழரசி அவருடைய கணவர் ரவிக்குமார் என்பவருக்கு சொந்தமானது என்று தெரிய வந்தது. அப்போது முன்பணம் ரூ.20,000/- மும் மாதம் ரூ.1,500/- வாடகையும் கொடுத்து வந்தேன். பின்னர் முன்பணம் ரூ.30,000/-மும், பின்னர் வாடகையாக ரூ.2,500/- ஆக கொடுத்து வந்தேன். மேற்படி வாடகையை திருமதி.தமிழரசியின் அண்ணன் திரு.ராஜபதியிடம் கொடுத்து வந்தேன். அதற்கு எந்த இரசீதும் எனக்கு கொடுக்கப்படவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அது முன்பணம் பெற்றுக் கொண்டதற்கான ஆவணத்தின் நகல் ஆகும், மேற்படி ஆவணம் **அ.சா.ஆ.**40 ஆகும். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது (வழக்கறிஞர் மூலம்).

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.ஆ.40 ல் சொல்லப்பட்டுள்ள வாசகங்களை நான் மறுக்கவில்லை. அந்த ஆவணத்தில் கண்ட விபரங்கள் உண்மை தான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.11.25 10:10:34 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**Spl. Case No. 1/2019**
**Prosecution Witness P.W. 29**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சுரேஷ் | Calling | : NGO |
| Father's name | : திரு.M.ராகவன் பிள்ளை | Religion | : இந்து |
| Village | : தக்கலை | Age | : 57 |
| Taluk | : கல்குளம் | | |

நாள் **- 24.11.2025**

**(1 ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது, 2 ம் எதிரி ஆஜர்).**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளியில் வசித்து வருகிறேன். நான் NGO நடத்தி வருகிறேன். பரமக்குடி, பாரதி நகரிலுள்ள, கதவு எண்.3/10/845 ஆக உள்ள ரவிக்குமார் என்பவருக்கு சொந்தமான வீட்டில் 2007 ம் வருடம் முதல் 2014 ம் வருடம் வரை வாடகைக்கு குடியிருந்து வந்தேன். மேற்படி வீட்டிற்கு வாடகையாக மாதம் ரூ.5,000/-மும் முன்பணம் ரூ.50,000/-மும் கொடுத்தேன். அந்த வீட்டின் மேல்மாடியில் குடியிருந்து வந்த திரு.ராஜபதி என்பவர் வாடகையை வாங்கி செல்வார். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் நான் முன்பணம் செலுத்தியதற்கான ஆவணத்தின் நகல் ஆகும், மேற்படி ஆவணம் **அ.சா.ஆ.41** ஆகும். இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது (வழக்கறிஞர் மூலம்).

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.ஆ.41 ல் சொல்லப்பட்டுள்ள வாசகங்களை நான் மறுக்கவில்லை. அந்த ஆவணத்தில் கண்ட விபரங்கள் உண்மை தான்.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SELVARAJAN SIVAKADATCHAM

Digitally signed by SELVARAJAN SIVAKADATCHAM
Date: 2025.11.25 10:10:41 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.